# பொறுப்புக் கூறல் நியமங்கள்

எமது பணிகளில் ஈடுபடுகின்ற மற்றும் அதன் மூலம் பயனடைகின்ற சமூகங்கள், நிறுவனங்கள், பங்காளர்கள் மற்றும் குழுக்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கு முனைகின்றோம். இதில் MenEngage Alliance வலையமைப்பின் அங்கத்தவர்களுக்கிடையேயான பொறுப்புக் கூறலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அனைத்து பங்காளர்களுக்கும் பதிலளிப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணித்துள்ளதுடன், எமது தீர்மானங்கள், செயற்பாடுகள் அல்லது செயற்படாமை பற்றிப் பொறுப்புக் கூறவேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

கீழ்க்காணும் நியமங்கள் தனிப்பட்ட ரீதியாகவும், நிறுவன ரீதியாகவும் மற்றும் வலையமைப்பு மட்டங்களிலும் பொறுப்புக் கூறல் நடைமுறைகளுக்கு வழிகாட்டுகின்றது. அவற்றில் சில MenEngage Alliance இன் அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட வகையிலும், ஏனைய பல்வேறு மட்டங்களிலுள்ள தலைவர்களுக்கும், அத்துடன் எமது அங்கத்துவ அமைப்புக்களுக்கும் மற்றும் வலையமைப்புக்களுக்கும் ஏற்புடையதாக அமையும்.

எதிர்பார்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் மட்டுப்பாடுகளை இடுதல், சிறந்த பிரயோகங்கள் மற்றும் பொறுப்புக் கூறல் கலாச்சாரத்தை ஊக்குவித்தல், சிறந்த தொடர்புகளைப் பேணுதல், தவறான செயல்களைத் தடுத்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்தல் போன்றன இவற்றின் நோக்கமாகும். இந்நியமங்கள் MenEngage Alliance இன் அடிப்படைக் கோட்பாடுகள், ஒழுக்கநெறிக் கோவை, பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான கொள்கை, அத்துடன் சிறுவர்கள் மற்றும் கட்டிளம் பருவத்தினருக்கான பாதுகாப்பு கொள்கையுடன் இணைந்து செயலாற்றுவதற்கு எதிர்பார்ப்பதுடன், இவ் அனைத்துச் சாதனங்களும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளமையால் அவை இணைத்துப் பார்க்கப்படல் வேண்டும்.

MenEngage Alliance இன் பிராந்திய மற்றும் உள்ளூர் வலையமைப்புக்கள் இந்நியமங்களை பொருத்தமான வகையிலும் அந்தந்த சூழமைவுக்கு ஏற்புடைய வகையிலும் உள்ளீர்த்துக் கொள்வதற்கு ஊக்கப்படுத்துகின்றது.

பொதுவான நியமங்கள்

1. நாங்கள் பெண்ணியவாத பெண்கள் உரிமைகளுக்கான நட்பு வட்டங்கள், LGBTI உரிமைகள், மற்றும் இளைஞர் செயற்பாட்டு அமைப்புக்கள், வலையமைப்புகள் மற்றும் இயக்கங்கள் ஆகியன நட்பு வட்டங்களாக இணைந்து செயலாற்றுவதுடன், அவர்களுடன் வெளிப்படையானதும் ஆக்கபூர்வமானதுமான கலந்துரையாடல்களில் ஈடுபடவும். உங்களுடைய வேலைகளில் அவர்களுடைய விருப்பங்கள் மற்றும் அவர்கள் வழங்குகின்ற பின்னூட்டல்களை ஏற்றுக்கொண்டு பதிலளிக்கவும். அவர்களுடைய தலைமைத்துவம், செயற்பாடுகள், கருத்துக்கள் மற்றும்

தளங்களுக்கு மதிப்பளிக்கவும். அவர்களுடைய தொலைநோக்கு, நிகழ்ச்சி நிரல்கள், அரசியல் பரப்புரைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும்.

2. பெண்ணியவாத பெண்கள் உரிமைகளுக்கான அமைப்புக்கள், LGBTIQ இனர், இளைஞர்கள், சிறுவர் உரிமைகள், இனப்பகைமையை எதிர்க்கும் அமைப்புக்கள், காலநிலை மற்றும் பலதரப்பட்ட சமூக நீதிக்கான அமைப்புக்களுடன் இணைந்து ஆக்கபூர்வமான பங்கேற்புக்களை கட்டியெழுப்புவதுடன், அவர்களுக்கு செவிசாய்த்து மதியுரைகளைப் பெற்றுக்கொள்ளவும். இதனை பல்வேறுபட்ட வழிகளில் மேற்கொள்வதற்கு சிந்திப்பதுடன், ஆலோசனைக் குழுக்கள், இவ் இயக்கங்களின் பணிப்பாளர் சபையின் பிரதிநிதிகள் மற்றும் செயற்குழுக்களாக மதியுரைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பொறுப்புக் கூறல் பற்றிய உரையாடல்கள் போன்றவற்றை மேற்கொள்வது பற்றியும் சிந்திக்கவும்.

3. பெண்கள், பெண் பிள்ளைகளின் கருத்துக்கள் மற்றும் அனுபவங்கள், பாலின இணக்கற்றவர்கள் - குறிப்பாக அவர்களின் பால், பால்நிலை, இன ரீதியான, பொருளாதார ரீதியான மற்றும் பல்வேறு தனித்துவ அடையாளங்களால் ஓரங்கட்டப்பட்டவர்களை எமது வேலைகளில் நிச்சயமாக மையப்படுத்தல் வேண்டும்.

4. பெண்ணியவாத இயக்கங்களில் காணப்படும் பன்முகத்தன்மையை அடையாளங் காணவும். அத்துடன், பெண்ணியவாதக் கருத்துக்களைக் கொண்ட ஒருசில பெண்ணியவாதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் போது ஏனைய பெண்ணியவாதக் கருத்துக்களுடன் ஏற்படுகின்ற முரண்பாடுகள் பற்றிக் கவனமாக உய்த்தறிந்து கொள்ள வேண்டும். ஒருசில குழுக்களுக்குப் பக்கச்சார்பாக நடந்துகொள்வதைத் தவிர்த்துக் கொள்ளவும். அதனால், எவ்விதமாக வகைப்படுத்தப்பட்ட ''எந்தவொரு குழுவுக்கும்'' நாங்கள் பொறுப்புக் கூறல் வேண்டும். பெண்ணியவாத இயக்கங்களில் காணப்படுகின்ற அனைத்துவித பன்மைத்துவங்களின் பொதுக் கோட்பாடுகளுக்கு ஒத்துழைக்கவும்.

5. ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளின் பன்முக அடையாளங்கள், அனுபவங்கள் தேவைகள் மற்றும் விருப்புக்களை செவிமடுக்கவும் மற்றும் அவற்றைக் கற்றுக் கொள்ளவும். அவர்களுடைய அதிகாரம், சிறப்புரிமைகள், மற்றும் அவற்றினால் ஏற்படும் தீங்குகளுடன் பிணைந்துள்ள சிக்கலான தொடர்புகள் பற்றிப் புரிந்து கொள்ளவும். உங்களுடைய வேலைகளில் ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுடன் செயலாற்றும் போது அதிகாரம், சிறப்புரிமைகள் மற்றும் ஆண்களுடைய பொறுப்புக்கள் தொடர்பாகவும் விழித்துக் கூறவும்.

6. உள்ளார்ந்த சுய பயிற்சியை (Inner work) மேற்கொள்ளவும். தங்களுடைய சமூகச் செயற்பாடுகளில் சுய விழிப்புணர்வு, சுய பாதுகாப்பு மற்றும் குணமடையச் செய்தல் போன்றவற்றுக்காக அடித்தளமிடுங்கள். சிறப்புரிமைகள் மற்றும் அதிகாரங்களுக்கு பொதுவாகவும் மற்றும் தனிப்பட்ட ரீதியாகவும் சுய சிந்தனையுடன் கூடிய பிரதிபலிப்புக்களைக் காட்டுவதற்கு முயற்சிக்கவும். பரஸ்பர பாதுகாப்புக்கான கூட்டு முயற்சிகள், குணமடையச் செய்தல்,

உள்ளார்ந்த ரீதியான தன்னிலை மாற்றங்கள், சுய சிந்தனையுடன் கூடிய வெளிப்பாடு மற்றும் நல்வாழ்வு போன்றவற்றை மேம்படுத்தவும்.

7. தங்களுடைய வேலைகளை பொதுவாக அணுகக் கூடியதாகவும், விமர்சனங்களை வெளிப்படையாக முன்வைக்கவும் இடமளிக்கவும். எமது கோட்பாடுகளுக்கு முரணாகவுள்ள தனிப்பட்ட ரீதியான மற்றும் நிறுவன ரீதியான நடைமுறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். அத்துடன், ஏற்பட்ட பாதிப்புக்களை ஏற்றுக்கொண்டு அவற்றை நிவர்த்தி செய்யவும்.

8. எமது வலையமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களில் தகவல்கள் மற்றும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு பொறுப்புக் கூறும் கலாச்சாரத்தைப் பேணி வளர்க்கவும். தங்களுடைய சக நண்பர்கள் மீது அக்கறை காட்டவும். மற்றவர்களுக்குப் பொறுப்புக் கூறும் சிறந்த அணியின் அங்கத்தவராக செயற்படவும். ஒருவருக்கொருவர் பொறுப்புக் கூறவும்.

**நிறுவன ரீதியான, தேசிய மற்றும் பிராந்திய வலையமைப்பு மட்டங்களிலான பொறுப்புக் கூறல்**

1. வலையமைப்பின் அடிப்படை கோட்பாடுகள், ஒழுக்கநெறிக் கோவை, பொறுப்புக் கூறல் நியமங்கள் மற்றும் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான கொள்கை போன்றவற்றைப் பொருத்தமான வகையிலும் அந்தந்த சூழமைவுக்கு ஏற்புடைய வகையிலும் உள்ளீர்த்துக் கொள்வதற்கு அங்கத்துவ அமைப்புக்களுக்கு MenEngage Alliance வலையமைப்புக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவும். இச்சாதனங்களை அந்தந்த சூழமைவுக்கு பதிலளிக்கும் வகையிலும் MenEngage Alliance இன் அங்கத்தவர்களுக்கு கூட்டாக உரித்துடையதாக்கவும்.

2. ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுடன் செயலாற்றும் போது, சுய சிந்தனையுடன் கூடிய வெளிப்பாடுகளுக்கு ஊக்குவிப்பதுடன், மேம்படுத்த வேண்டிய துறைகள் மற்றும் பொறுப்புக் கூறலுக்கான மூலோபாயங்களை அடையாளங் காணவும்.

3. ‘‘குறுக்கு நிலைமை வெண்ணியவாத கோட்பாடுகள்’’ மீது தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்களுடன் பொறுப்புக் கூறல் பொறிமுறைகளின் இயலளவுகளைத் திடப்படுத்தவும். பயிற்சிச் செயலமர்வுகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் ஏனைய கற்றல் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தவும்.

4. அங்கத்துவ அமைப்புக்களில், ஒரு நாட்டில், மற்றும் பிராந்திய வலையமைப்புக்களில் பெண்கள் உரிமைகளுக்காக போராடும் தலைவர்கள் மற்றம் அமைப்புக்கள், இளைய தலைவர்கள், இனப்பகைமைக்கு எதிரானவர்கள், LGBTQIA+ இனர், மற்றும் ஏனைய சமூக நீதிக்கான இயக்கங்களில் ஆளுகை மற்றும் தீர்மானமெடுக்கும் கட்டமைப்புக்களில் ஆக்கபூர்வமான பங்கேற்பு மற்றும் தலைமைத்துவத்தை ஊக்குவிக்கவும். அத்துடன், தலைமைப் பதவிகளை

வகிப்பவர்கள் பால்நிலைச் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

5. பிரதான பங்காளர்களுடன் (குறிப்பாக பெண்கள் மற்றும் LGBTQIA+ இனரின் உரிமைகளுக்காக போராடுகின்ற அமைப்புக்கள், சுதேச மற்றும் இனப்பகைமையை எதிர்க்கும் இயக்கங்கள், இளைஞர் தலைவர்கள், சிறுவர் உரிமைக்கான குழுக்கள், மற்றும் ஏனைய ஓரங்கட்டப்பட்ட சமூகக் குழுக்கள்) பொறுப்புக்கூறல் தொடர்பான உரையாடல்களை நடாத்தவும்.

## தொடர்புடைய கரிசனைகள் மற்றும் முறைப்பாடுகளை மேற்கொள்ளும் போதான பொறுப்புக் கூறல்

1. தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் கரிசனை கொள்கின்ற விடயங்கள் மற்றும் முறைப்பாடுகளை முன்வைக்கக்கூடிய வகையிலான நிறுவன ரீதியான மற்றும் வலையமைப்பு ரீதியான கலாச்சாரம் மற்றும் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்தவும்.

2. Alliance மற்றும் அதன் அங்கத்தவர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக யாதொருவருக்கும் முறைப்பாடுகளை அல்லது விமர்சன ரீதியான பின்னூட்டல்களை முன்வைப்பதற்கு இயலுமான வகையில் பல்வேறுபட்ட முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அநாமதேய (பெயர் குறிப்பிடாமல்) முறையில் முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கான பொறிமுறை காணப்படுகின்றது. பின்னூட்டல்களை தேடி அறிந்து கொள்வதற்கும், தொகுப்பதற்கும் MenEngahe Alliance Global reporting page (அறிக்கையிடும் பக்கம்) இனைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கவும்.

3. காலம் தாழ்த்தாமல் செயற்படவும். முன்வைக்கப்பட்ட அனைத்து முறைப்பாடுகள் மற்றும் ஐயவினாகைகளையும் கவனத்திலெடுத்து செயலாற்றவும். முறைப்பாடுகள் கிடைத்தமையை ஒப்புக்கொண்டு, அவற்றுக்குத் துரிதமாகத் தீர்வு கண்டு உரிய நேரத்தில் மீண்டும் பதிலளிக்கவும்.

4. முறைப்பாடுகள் தொடர்பாக பக்கச்சார்பற்ற வகையிலும், அனைத்துத் தரப்பினர்களுக்கும் நியாயம் கிட்டும் வகையிலும் மீள்பார்வை செய்யப்படுவதை உறுதிப்படுத்தவும். அவர்களுடைய பிரத்தியேகத்திற்கான உரிமை மற்றும் பாதுகாப்புக்கான உரிமைக்கு மதிப்பளிக்கவும். தவறுகளை சுட்டிக் காட்டுபவர்களைப் பாதுகாக்கவும். இச்செயன்முறையில் ஒத்துழைப்பு வழங்கக்கூடிய நடுநிலையான தரப்பினர்கள் பற்றிக் கருத்தில் கொள்ளவும்.

5. பாதிப்புக்குள்ளானவர்கள் உடன்படும் பட்சத்தில், இயன்றவரை ''மீள்நலனுறுத்தல் நீதி அணுகுமுறையை[1], கையாளவும். தவறான நடத்தைகளை ''எதிர்ப்புத் தெரிவிக்கும்'' வகையிலான பொறுப்புக் கூறல் மாத்திரமன்றி, தவறிழைத்தவர்கள் தமது தவறுகளுக்கான சுய சிந்தனையுடன்

[1] இவ் அணுகுமுறை தொடர்பான மேலதிக விபரங்களை Alliance இன் பாலியல் துன்புறுத்தல்கள் பற்றிய கொள்கையில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

கூடிய பிரதிபலிப்புக்களைக் காட்டவும், கற்றுக் கொள்ளவும், நிவர்த்தி செய்து கொள்ளவும், மற்றும் அவற்றைச் சரியான வகையில் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கவும்.

6. MenEngage வலையமைப்புக்கள் மற்றும் நாடுகளின் அங்கத்தவர்கள் மற்றும் பிராந்திய மட்டம் மற்றும் உள்ளூர் மட்டத்திலான பொறுப்புக் கூறல் பொறிமுறையைப் பலப்படுத்தவும். உள்ளூர் மட்டங்களில் இடம்பெறும் பிரச்சினைகளுக்கான முறைப்பாடுகள் மற்றும் கரிசனைகள் முன்வைக்கப்படும் போது, MenEngage வலையமைப்பு தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியாக வகிக்க வேண்டிய பதிலளிப்புடன் கூடிய வகிபாங்குகள் பற்றி உடன்பாடுகளை எட்டி கூட்டாகச் செயலாற்றுவதற்கு முயற்சிக்கவும்.

**பொறுப்புக் கூறும் வகையிலான வேலைத்திட்டத்தை தயாரித்தல்**

1. கருத்திட்டங்கள் மற்றும் தொடக்க முயற்சிகளை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக பெண்கள் உரிமைகள், இனரின் உரிமைகள் மற்றும் இளைஞர்கள் தலைமை வகிக்கும் (ஏற்புடைய வகையில்) அமைப்புக்களுடன் ஆக்கபூர்வமான பங்காளராகவும். புதிய கருத்திட்டங்கள் அல்லது தொடக்க முயற்சிகளைத் திட்டமிடும் போது இவ் அமைப்புக்கள் மற்றும் இயங்கங்களின் தலைவர்களுடன் மதியுரைகளைப் பெற்றுக்கொள்ளவும். சமூக மட்ட மகளிர் அமைப்புக்கள் மற்றும் தலைவர்களிடம் ஒத்துழைப்புக்களைக் கோரும் போது, இயலுமான வகையிலும் ஏற்புடைய வகையிலும் நட்ட ஈடுகளையோ அல்லது வேறு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளையோ வழங்கவும்.

2. பெண்கள், பெண் பிள்ளைகள் மற்றும் பால்நிலை இணக்கமற்றவர்கள் அவர்கள் தமது சமூகங்களில் ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுடனான தலையீடுகள் பற்றிய பின்னூட்டல்களை வழங்குவதை உறுதிப்படுத்தவும்.[2] அவர்களுடைய தேவைகள் மற்றும் விருப்புக்களுக்கமைய உங்களுடைய வேலை பற்றிய புரிதலை உறுதிப்படுத்தவும். அவற்றை தங்களுடைய தீர்மானம் எடுக்கும் செயன்முறையின் ஒருபகுதியாக உள்வாங்கவும்.

3. ஆண்கள், ஆண் பிள்ளைகள் மற்றும் ஆண் அடையாள நபர்களுடன் இணைந்து செயலாற்றும் போது தலையீடுகள் மற்றும் வேலைத்திட்டத்தை தயாரிக்கும் போது பால்நிலை தன்னிலைமாற்றம் மற்றும் குறுக்கு நிலைமைகள் பற்றிய அணுகுமுறைகளை உறுதிப்படுத்தவும். செய்திகள் மற்றும் செயன்முறைகளில் ஆண்களின் ஆதிக்கத்தை ஊக்குவிப்பதைத் தவிர்க்கவும், வெள்ளையின மேலாதிக்கம், ஒத்தபாலீர்ப்பு மற்றும் நிலைமாற்றுப் பால்நிலை மீதான அச்சம் போன்றவற்றை ஊக்குவிப்பதைத் தவிர்க்கவும்.

[2] சர்வதேச மீட்புக் குழு (2013). பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்காக: பொறுப்புக் கூறும் நடைமுறைகள் மூலம் ஆண்களை இணைத்துக் கொள்ளல். முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்காக தனிநபர் நடத்தை மாற்றங்களில் தன்னிலை மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான தலையீடுகள். நியூயோர்க் : ஐஆர்சி.

4. ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுடனான செயற்பாடுகளின் போது பங்குபற்றுநர்கள் மற்றும்/அல்லது வேலைத்திட்டத் தலைவர்களிடமிருந்து ஆண்களின் ஆதிக்க அதிகாரம் மற்றும் சிறப்புரிமைகள் உருவாகலாம் என்பதைப் புரிந்து கொள்ளவும். ஆகவே, பாதிக்கப்படக் கூடிய கருத்துக்கள் அல்லது செயற்பாடுகளை விழித்துக் கூறுவதற்கும், மற்றும் குழுத்தலைவர்களுக்கு முனைப்பான பயிற்சி மற்றும் தொடர்ச்சியான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தயாராக இருக்கவும்.

5. ''தீங்கிழைக்காத'' கோட்பாட்டின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொடக்க முயற்சிகள் சரியான வகையில் தெளிவூட்டப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தவும். அதாவது, அநீதி மற்றும் சமத்துவமின்மையை[3] ஊக்குவித்தல் மற்றும் தீங்குகளை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு எதிர்பாராத விளைவுகள் பற்றியும் விழிப்புடன் இருக்கவும். எமது செயற்பாடுகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் மூலம் பயனடைகின்ற அனைத்து நபர்களுடைய நல்வாழ்வு மற்றும் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கவும்.

6. ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுடனான பால்நிலை தன்னிலைமாற்ற செயற்பாடுகள் தனிநபர், உறவுமுறை, நிறுவன, மற்றும் கட்டமைப்பு ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதைக் கருத்தில் கொள்ளவும். உங்களுடைய செயற்பாடுகள் இம்மட்டங்களில் ஒன்றை மாத்திரம் கவனம் செலுத்தினால், ஏனைய மட்டங்களில் பங்காளர்களாக ஏனையவர்களுடன் இயங்குவதற்கு முயற்சிக்கவும்.

7. ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுடன் இணைந்து மேற்கொள்ளும் செயற்பாடுகள் மற்றும் ஆணாதிக்க தன்னிலைமாற்றங்களின் விளைவுகளுக்கான சான்றுகளைக் கட்டியெழுப்பவும். உங்களுடைய வேலைத்திட்டத்தின் கண்காணிப்பு, மதிப்பாய்வு மற்றும் கற்றல் கூறுகளுடன் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நம்பிக்கைக்குரிய நடைமுறைப் பிரயோகங்களின் ஆவணப்படுத்தல்களையும் ஒருங்கிணைக்கவும்.

**பொறுப்புக் கூறலுக்கான பரிந்துரைத்து வாதிடல்**

1. பெண்ணியவாத பரிந்துரைத்து வாதிடல் நிகழ்ச்சி நிரலுடன் இணைந்து செயற்படுவதுடன், அவற்றின் செயற்பாடுகளை அதிகரிக்கவும். பெண்ணியவாத, இனப்பகைமையை எதிர்க்கின்றவர்கள், இளைஞர்கள் மற்றும் ஏனைய சமூக நீதிக்காகப் போராடுகின்றவர்களுடன் இணைந்து மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளைக் கற்றுக் கொள்ளவும். அவர்களுடைய போராட்டங்களுக்கான உடனடி அழைப்புக்கள், செயற்பாட்டாளர்களின் அறிவிப்புக்கள், கூட்டாக

[3] சமூக மாற்றத்திற்காக பெண்ணியவாதிகளின் கூட்டு (COFEM), பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கான பொறுப்புக் கூறல், பெண்ணியவாத கைநூல் பக்கம் 4, 2018.

வாதிடல், மற்றும் அவர்களுடைய பிரேரிப்புக்களுக்கான ஒத்துழைப்புக்களைக் கோரல் போன்றவற்றுக்கு ஒத்துழைக்கவும்.

2. ஆண் மற்றும் ஆணாதிக்க நிலைநோக்குகள் மூலம் பரந்துபட்ட பெண்ணியவாத மற்றும் சமூக நீதிக்கான நிகழ்ச்சி நிரல்களுக்கு பெறுமதி சேர்க்கவும்.

3. பெண்ணியவாத, பெண்கள் உரிமைகள், பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம்/வெளிப்பாடுகள் மற்றும் பாலியல் பண்புகள் (SOGIESC), இனவாத எதிர்ப்பு, காலநிலை, இளைஞர், மற்றும் சமூக நீதிக்கான செயற்பாட்டாளர்கள், நிறுவனங்கள், வலையமைப்புக்கள் மற்றும் இயக்கங்கள் கூட்டாக பரிந்துரைத்து வாதிடல் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கவும். உங்களுடைய பரிந்துரைத்து வாதிடலுக்கான நோக்கங்களை பெண்ணியவாத பெண்கள் உரிமைகள் மற்றும் பால்நிலை நீதிக்கான இயக்கங்களின் பரிந்துரைத்து வாதிடல் கரிசனைகளுடன் ஒருங்கிணைக்கவும்.

4. நீங்கள் இயங்குகின்ற சர்வதேச, பிராந்திய, தேசிய, அல்லது உள்ளூரில் கொள்கைகள் தொடர்பாக செயலாற்றும் தளங்களில் ஆக்கபூர்வமான பரிந்துரைத்து வாதிடல் பங்கேற்புக்களை அதிகரிக்கவும். நீங்கள் தனித்தனியாக உருவாக்கியுள்ள கட்டமைப்புக்களில் மாத்திரம் செயற்படுவதையோ அல்லது போட்டியிடுவதையோ தவிர்க்கவும்.

5. ஆணாதிக்க நிகழ்ச்சி நிரலை மாத்திரம் மையப்படுத்திய அல்லது ஆணாதிக்கத்திற்கு அடிமையாகிய ஆண்களை மாத்திரம் மையமாகக் கொண்ட பேச்சுக்களுக்கு சவால் விடுக்கவும். பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுடைய தேவைகளை மாத்திரம் அங்கீகரித்தும், அதற்கென வளங்களை ஈடுபடுத்தலுக்குமான முயற்சிகளுடன் கூடிய போட்டியான செயற்பாடுகளை மேற்கொள்வதைத் தவிர்க்கவும்[4].

6. ஆண்கள் மற்றும் ஆணாதிக்கம் தொடர்பாக அனைத்து கொள்கைத் திட்டங்களிலும் பெண்ணிய குறுக்கு நிலைமைகள் (ஒடுக்குமுறைகள் மற்றும் பாகுபாடுகளை அனுபவிக்கும் விதம்) பற்றிய பகுப்பாய்வின் மூலம் மேற்கொண்டு செல்வதை உறுதிப்படுத்தவும். கரிசனையற்ற தலையீடுகள் கொண்ட நிகழ்ச்சி நிரல் மற்றும் பெண்ணியவாதப் போராட்டங்களையும் அவற்றின் உண்மை நிலைகளை மையப்படுத்தாத முயற்சிகளையும் தவிர்க்கவும்.

7. ஆண்கள் மற்றும் ஆணாதிக்க நிலைநோக்குகள் கொள்கைகளில் உள்ளடக்கப்படும் போது, கொள்கை வகுப்புக்கள், உள்ளடக்கங்கள், நடைமுறைப்படுத்தல், கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு விடயங்களில் பெண்ணியவாத செயன்முறைகள் மற்றும் பகுப்பாய்வுகளைப் பின்பற்றுவதற்கான பெண்ணியவாதச் செயன்முறைகளை ஆதரித்துப் பேசவும்.

---

[4] குழுக் கலந்துரையாடல் : பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளை ஈடுபடுத்துவதில் பொறுப்புமிக்க நடைமுறைப் பிரயோகங்கள். உப – அனுசரணை : WHO, UNAIDS மற்றும் CERAH. டிசம்பர். 2019

**பொறுப்புக் கூறலுடன் கூடிய நிதி சேகரிப்பு**

1. பெண்களுடைய உரிமைகளுக்காக இயங்குகின்ற நிறுவனங்கள், குறிப்பாக நிதிப் பிரச்சினைகள் காணப்படும் சிறிய நிறுவனங்கள் ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுடன் செயலாற்றுவதற்காக நிதி சேகரிக்கும் போது அந்நிறுவனங்களுக்கு ஏற்படுத்தும் விளைவுகள் பற்றி கவனம் செலுத்த வேண்டும்.
   போட்டித்தன்மையை தடுப்பதற்கும் வளங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் :

- பொதுவாக பால்நிலை தன்னிலைமாற்ற செயற்பாடுகளுக்காகவும், குறிப்பாக பெண்கள் உரிமைகள் பற்றி இயங்குகின்ற சிவில் சமூக அமைப்புக்களுக்கு அதிகளவு வளங்களை ஒதுக்குவதற்காக நிதியனுசரணையாளர்களிடம் ஆதரித்து வாதிடல்.
- திட்டங்களை தயாரித்தல், நிதிதிரட்டல், மற்றும் நடைமுறைப்படுத்தலில் பெண்கள் உரிமைகள் பற்றி இயங்குகின்ற நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றல்.
- பெண்கள் தலைமை தாங்கும் உள்ளூர் குழுக்கள் மற்றும் தொடக்க முயற்சிகளுக்கு நேரடியாக நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு ஆதரித்து வாதிடல்
- புதிய நிதி சேகரிப்புக்கான வாய்ப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் அவற்றின் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், அவ்வாறான தளங்களை அணுகுவதற்கும் பெண்கள் உரிமைகளுக்காக இயங்குகின்ற அமைப்புக்களுக்கு அழைப்பு விடுத்தல்.
- பால்நிலை நீதிக்காக செயலாற்றுபவர்களிடையே ஏற்படக் கூடிய போட்டித்தன்மைகளையும் அதிகாரப் படிநிலைகளையும் குறைப்பதற்காக நிதியனுசரணையாளர்களை தெளிவூட்டல்.

2. நிதி சேகரிப்பை ஆரம்பிப்பதற்கு முன்னர், பெண்கள் உரிமைகளுக்காக இயங்குகின்ற நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நிதியில் எவ்வாறான சேவைகள் வழங்கப்படுகின்றன, என்பதை மதிப்பாய்வு செய்து, அவர்களுக்கு வளங்களை ஒதுக்குவதற்காக ஆதரித்து வாதிடல்.

**சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் கட்டிளம் பருவத்தினர் மீதான பொறுப்புக் கூறல்**

1. அங்கத்துவ அமைப்புக்கள் மற்றும் வலையமைப்புக்களில் தீர்மானம் எடுக்கும் செயன்முறைக் கட்டமைப்புக்கள் உள்ளிட்ட இளைஞர் தலைமைத்துவம் மற்றும் ஆக்கபூர்வமான பங்கேற்புக்களை வலுப்படுத்தவும். சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை பாகுபாடு காட்டும் கட்டமைப்பு முறைமையில் மூத்தவர் வாதங்களுக்கு சவால் விடுத்தல்.

2. MenEngage Alliance மற்றும் அதன் நிகழ்சித்திட்ட ஏற்பாடுகளில் இளைஞர்களின் தலைமைத்துவம், நிபுணத்துவம், மற்றும் பன்மைத்துவ கண்ணோட்டங்கள் மையப்படுத்தியுள்ளமையை உறுதிப்படுத்தவும்.

3. சமூக மட்டத்திலும், தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களிலும் இளைஞர்களை வலுவூட்டி கட்டியெழுப்பவும். மேலும், தலைமுறைகளுக்கிடையிலான கருத்துப் பரிமாற்றங்கள் மற்றும் உரையாடல்களை ஊக்குவிக்கவும்.

4. MenEngage Alliance இன் செயற்பாடுகளில் இளைஞர்கள் பங்கேற்பதற்கும், தலைமைத்துவம் வகிப்பதற்கும் இளைஞர்களிடமுள்ள திறன்கள் மற்றும் அறிவை அடையாளங் காணவும். புதிய தலைமுறையினருக்கான தலைமைத்துவ வழிகாட்டல் உள்ளிட்ட, இளைஞர்கள் தலைமைத்துவம் வகிப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் மூத்த தலைவர்களின் பொறுப்பாகும்.

5. எமது செயற்பாடுகளில் பங்குபற்றுகின்ற அனைத்து சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கும் தங்களுடைய நிறுவனம் மற்றும் வலையமைப்பு பாதுகாப்பு மற்றும் நம்பகமான பாதுகாப்பு சூழலை ஏற்படுத்தியுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் நடபடிமுறைகளை உள்ளீர்த்துக் கொள்ளவும். சிறுவர்கள் மற்றும் கட்டிளம் பருவத்தினரைப் பாதுகாப்பதே எமது முன்னுரிமையான பணியாகும்[5].

[5] மேலதிக உசாவல் : MenEngage இன் சிறுவர்கள் மற்றும் கட்டிளம் பருவத்தினருக்கான பாதுகாப்பு கொள்கை